
## இயல் 6.4 - வடிவியல்

பயிற்சி எண் :: 6.4.3.1.A

வடிவியல் - முக்கோணம் - வரையறை

## வடிவியல் - முக்கோணம் - வரையறை




மூன்று நேர் கோட்டுத்துண்டுகளால் அமைந்த ஒரு மூடிய வடிவமே **முக்கோணம்** எனப்படும்.

1. மூன்று கோணங்கள் அடங்கிய ஒரு அமைப்பாதலால் இதை **முக்கோணம்** என வழங்குகிறோம்.
2. ஒரே நேர்கோட்டில் **அமையாத** 3 புள்ளிகளின் இணைப்பே, ஒரு முக்கோணத்தை உருவாக்குகிறது.
3. அம்மூன்று புள்ளிகள் முறையே $A$,$B$ மற்றும் $C$, முக்கோணத்தின் **முனைகள்** என அழைக்கப்படுகின்றன.
4. அம்மூன்று புள்ளிகளையும் இணைக்கும் கோட்டுத்துண்டுகள் முறையே $\overline{AB}$, $\overline{BC}$ மற்றும் $\overline{CA}$, அந்த முக்கோணத்தின் **பக்கங்கள்** ஆகும்.
5. புள்ளிகளில் சந்திக்கும் கோட்டுத்துண்டுகள் ஒரு முக்கோணத்தில் **3 கோணங்களை** உருவாக்குகின்றன. அவை முறையே $\angle A$, $\angle B$ மற்றும் $\angle C$ ஆகும்.
6. உதாரணமாக, கோணம் $\angle A$ - ஐ நாம் $\angle CAB$ என எதிர் கடிகாரச்சுற்று (Anti clockwise) முறையிலும் குறிப்பிடலாம். அது போல மற்ற 2 கோணங்களையும், நாம் மூன்று முனைகளின் பெயர் கொண்டு குறிப்பிடலாம்.

---

மேற்காணும் முக்கோணத்தை, முனைகளின் பெயர்கள் எதிர் கடிகாரச்சுற்றில் அமையும் விதத்தில், கீழே காண்பிக்கப்பட்டுள்ளது போல மூன்று விதத்தில் குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| $\triangle ABC$ | $\triangle BCA$ | $\triangle CAB$ |

Sum & solution prepared on Thursday 30th December, 2021 :: 15:29 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020.**
**https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**